


# புள்ளிகளும் ஒருநாள் கோடுகளாய் நீளும்...

கே.எம்.செல்வதாஸ்

# புள்ளிகளும் ஒருநாள் கோடுகளாய் நீளும்...

கே.எம். செல்வதாஸ்

# புள்ளிகளும்
# ஒருநாள்
# கோடுகளாய் நீளும்...

கே.எம். செல்வதாஸ்

**புள்ளிகளும் ஒருநாள் கோடுகளாய் நீளும்**
(கவிதைகள்)
கே.எம்.செல்வதாஸ்
முதற்பதிப்பு: 2023
© மயூரி செல்வதாஸ்
அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன்
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம்: 52
விலை: 250.00
அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Pullikalum Orunaal Kodukalaai Neelum**
(Collection of Poems)
K.M. Selvathas
First Edition: 2023
©Mayoori Selvathas
Cover Designed by K.Bharaneethara
Published by Jeevanathy, Kalai aham, Alvai
Pages: 52
Price: 250.00
Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-624-5881-93-2

ஜீவநதி வெளியீடு – 272

எழுத்துலகிற்கு என்னை
ஆற்றுப்படுத்திய
மதிப்புறு ஆசான்
இ.சு.முரளிதரன் அவர்களுக்கும்
இலக்கியக் களம் தந்து
தொடர்ந்து இயங்க வைக்கும்
நண்பன் க. பரணீதரன்
அவர்களுக்கும்...

# உள்ளே...


- வேரினை அறுக்கும் கிளைகள்/13
- பறவைகளின் வலிகள் /14
- கனவுகளைச் சுமக்கும் மனிதன் /15
- இரவின் முகட்டில் மின்னும் நட்சத்திரங்கள் /16
- மனிதம் மலரட்டுமே /18
- நாகரிக மனிதர்கள் /19
- அழகுச்சிறை /மீன்களின் முகாரிகள் /20
- மரங்களைக் காயப்படுத்தும் கோழிகள் /21
- மீள அமர முடியா உலகம் /23
- பூவினிடத்தை நிரப்பும் வண்ணத்துப்பூச்சிகள் /24
- யாவும் கடந்து போதல் /25
- தொலைத்து விட்டோம் /26
- காலம் வலிது /27
- சருகு /28
- மறுதலிப்பு /29
- புள்ளிகளும் ஒருநாள் கோடுகளாய் நீளும் /30
- சாம்பல் மேடுகள் /31
- நானாக இருக்க ஆசைப்படுகிறேன் /33
- அனுபவம் /35
- என்னை விட்டு விடுங்கள் /35
- என் கேள்விகள் /36
- ஆறாவடுக்கள் /37
- காலத்தின் சாட்சிகள் /38
- காலக்கடமை /39
- உணர்தல் /40
- காலம் தப்பிய மழை /41
- விண்ணோக்கும் விருட்சங்கள் /42
- மனிதம் /43
- புதிய கிரகம் நோக்கிய பயணம் /44
- தன்னையுணர்தல் /46
- மாயக்கோடுகளை விழுங்கும் ஒளி /47
- வறண்டுபோன வார்த்தைகள் /48
- உயிர்கள் கலந்த கடல் /49
- ஆத்ம வலிமை /50
- பட்டாம்பூச்சியாய் வெளிவரும் கூட்டுப்புழு /51

# உள்ளுணர்வு சார்ந்த மொழிகளில் பிரவாகிக்கும் கவிதைகள்

கருத்தறிவித்தலோ அல்லது செய்தி கூறலோ கவிதையாகிவிடாது. அவற்றைக் கடந்து உணர்த்துதிறன் மிக்கதாய் அமையும் மொழிச் சேர்க்கையையே கவிதையாகக் கொள்ள முடியும். அதாவது கவிதை சொல்வதற்கான கருவி அல்ல. அது உணர்த்தலுக்கான கருவி. உணர்தலுக்கான கருவியாய் விளங்கும் கவிதையும் அதன் ஆக்கக் கூறாய் விளங்கும் மொழியும் வசப்படுவதென்பது நீண்ட பயில்வின் வழியே நிகழக் கூடியது.

யாருமறியாதபடி காற்றோடு பேசுவதைப் போல், அது தரும் கணக்கிறந்த இன்பம் போல், இன்னும் உணர்வின் வெளிச்சங்களாய், மனப்பிரபஞ்சத்தைச் சூழும் சக்தியாய், சொற்களுக்குள் சிக்காத சிறகசைப்பாய், கவிதை இருக்கலாம். அதன் ஆழ அகலங்களின் வேர்களை ஊற்றுக்களால் கூட தொட முடியாமற் போகலாம். புலனுணர்வின் புதுப்பக்கங்களைத் தீராது உப்பவிக்கும் மூலமாய் கவிதை இயக்கமுறலாம். இவ்வகையில் புலன் சார்ந்து, அனுபவம் சார்ந்து, வசீகரங்கள் சார்ந்து இயக்கமுறும் கவிதையின் போக்குகள் குறித்த மதிப்பீடுகள் கோட்பாட்டடிப்படையிலும் அனுபவப் பகிர்வின் வழியும் ஆளுக்காள் வேறுபடக் கூடியன. ஆனால், கவிதையைப் புரிதல் என்பது கவிஞரின் மன இயக்கத்தைப் புரிவதாகவே அமையும்.

கவிதையின் ஒவ்வொரு கூறுகளிலும் அனுபவம்சார் விடயங்கள் பிணைந்திருக்கும். அப்பிணைப்பிற்கான அடிப்படை, இலட்சியங்களாகவோ, அல்லது தன்னடிப்படைச் சிந்தனையாகவோ அமையலாம். எது எப்படி இருப்பினும் கவிதைகளின் கனதி குறித்த நிலைப்பாட்டை முன்வைப்பதில்

கவிஞனின் கவிதை பற்றிய தேடல் அவசியமாகிறது. இக்கவிதையின் வழியே கவிஞன் வாசகனுடன் பேசும்மொழி உள்ளுணர்வின்பாற்பட்டது. இவ்வுணர்வின் வழி பேசுகின்ற வகையில் கே.எம்.செல்வதாஸின் கவிதைகள் அமைந் துள்ளன. அவை, பல்வேறுபட்ட பொருண்மைகளை வெளிப் படுத்தி நிற்கின்றன. அந்த வகையில் செல்வாவின் இரண்டாவது கவிதைத் தொகுதியாக "புள்ளிகளும் ஒருநாள் கோடுகளாய் நீளும்..." என்ற நூல் வெளிவருவது மகிழ்ச்சி யளிக்கிறது.

ஏலவே 2009 இல் இவர் எழுதி வெளியிட்ட முதலாவது கவிதைத் தொகுப்பு நூல் "நிஜமல்ல நிழல்கள்" என்ற மகுடத்தில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. அத் தொகுப்பு செல்வாவின் கவிதைப் பிரவேசமாக அமைந்தாலும், அவர் அதில் முன்னிறுத்தியிருந்த பொருண்மைகள் அவரின் எதிர்கால வெளிச்சத்தை விம்பப்படுத்துவதாகவே அமைந்தன. இயற்கை மீதான ஈர்ப்பும், போர்தரும் அவலங்களும், இடப் பெயர்வின் வலிகளும், அவலங்களைக்கடந்து மீள்வோம் என்ற நம்பிக்கையும் அத்தொகுதியின் கவனிப்புக்குக் காரணங்களாயின. முதற் தொகுதியான இந்நூல் 2014 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழி பெயர்ப்புக் கற்கை நெறியினரால் "Shadows are not real" எனும் தலைப்பில் ஆங்கில மொழியில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

கவிதைக்கான படிமம், உத்திகள் என்பவற்றுக்கப்பால் பொருண்மையை முன்னிறுத்தல் என்பது, செல்வாவின் கவிதைகளை உணர்வதற்கும் அவரின் கவிதை மனதைப் புரிவதற்கும் பொருத்தப்பாடுடையதாகும். "வேரினை அறுக்கும் கிளைகள்" (பக் - 13) முதல் "பட்டாம் பூச்சியாய் வெளிவரும் கூட்டுப்புழு" (பக் - 51) ஈறாக 35 கவிதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இக்கவிதைகளில் இயற்கை மீதான ஈர்ப்பே அதிகம் வெளிப்பட்டு நிற்கின்றன. அதாவது இயற்கை மீது கொண்டுள்ள நம்பிக்கை, அது அழிக்கப்படும் போது கவிதை மனம் கொள்கின்ற சீற்றம், இயற்கையின்றி மனிதன்

இல்லையென்ற தத்துவம், இயற்கையை இரசிக்கின்ற பாங்கு என்பன பொருண்மைகளில் தலையாய விடயங்களாக அமைந்துள்ளன.

இயற்கையைக் கூர்ந்து நோக்கல் என்பதும் கவிதை வழி வெளிப்படும் உணர்வுகளில் தொற்றியுள்ள குறித்த அவதானிப்புக்களும் அலாதியானவை. இவை யாவற்றையும் கவியாக்க முனைந்துள்ளமை கவிஞரின் கவிப்பற்றையும் மனித நேயத்தையும் கட்டியங்கூறி நிற்கின்றன. ஆனாலும் நல்ல கவிதை என்ற இடம் பாராட்டின் மூலமோ வாழ்த்து மூலமோ கிட்டிவிடுவதில்லை. அது இலக்கியத்தரத்தைப் பொறுத்து அமைவது. அவ்விடத்தை அடைதல் என்பது மொழியைக் கையாள்வதில் தங்கியுள்ளது. கவியாக்கச் செயற் பாட்டில் மிகுந்த தாடனமுடையவராய் மிளிர்வதற்கு மொழியை வசப்படுத்த வேண்டும். வாலாயமான விடயப்பரப்புக்களைத் தேர்ந்தெடுத்து புனைய வேண்டும். எவற்றைப் பாட வேண்டும் என்ற மன நோக்கைக் கொண்டிருக்க வேண்டும். அதன்வழி இயக்கமுறும் ஒரு கவிஞராலேயே இலகுவில் வாசகரின் நுகர்வுத் தளத்தை தக்க முறையில் பேண முடியும். இவ்வடிப் படைத் தன்மைகளைப் புரிந்து கொள்ளல் என்பது ஒவ்வொரு கவிஞர்களுக்கும் அவசியமாகிறது. இத்தன்மைகளைப் புரிந்து கொண்டு இயக்கமுறும் கவிஞராகவே இளவல் செல்வாவை நான் பார்க்கிறேன்.

“நேற்றைக்கும்
இன்றைக்குமான இடைவெளியில்
களவாடப்பட்டிருந்தது
பூமிப்பந்து” (பக் - 27)

காலக்கணக்கின் ஆத்மாவை இந்த இடைவெளியில் தன்மொழியில் நிறுவ முயலும் கவிஞர் தொடர்ந்து,

“........
இந்த உலகில்
எதுவும் நிரந்தரமில்லை,
என்பதனை,
மறுபடியும் மறுபடியும்
நிரூபித்துக் கொண்டே

செல்கின்றது,
காலம்." (பக் - 27)

எனக் காலத்தின் வலிமைமையும் அதன் ஈடிணையற்ற தனித்துவத்தையும் "காலம் வலிது" என்ற தன் கவிதையில் பதிவு செய்கிறார். படிக்கும் போது தான் சில உண்மைகள் உணர்த்தப்படுகின்றன.

"ஆறாவடுக்கள்" என்ற கவிதையில்,

"...................
இன்று எம்மைக்
காத்துக் கொள்ள மறந்தால்
நாளை உங்களைக் காப்பாற்ற
எவராலும் முடியாது.
இப்படிக்கு,
இயற்கை." (பக் - 37)

இயற்கை பேணப்பட வேண்டும் என்ற அவசியத்தை யும் பேணமறுக்கும் சமுதாயம் அழிந்து போகும் என்ற எச்சரிக்கையையும் சேர்த்து முன்வைப்பது கவிஞனின் இயற்கை மீதான நேசத்தையும் மனிதர்கள் மீது அவர் கொண்டுள்ள அக்கறையையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

"எங்களைப் போல
வாழப்பிறந்தவர்கள் தான்
அவர்களும்
ஆனாலும்
காலம் அவர்களை மாத்திரம்
வஞ்சித்து விட்டது." (பக் - 43)

"மனிதம்" என்ற இக்கவிதை இறந்தவர்களுக்கும் அல்லது வாழவும் இறக்கவும் முடியாமல் இருப்பவர்களுக்கும் நேர்ந்த அவலத்தை எண்ணிக் கலங்குவதாயுள்ளது. அது மட்டுமன்றி இந்நிலை கண்டு இரக்கமுறும் வாழ்ந்தும் வாழாத மனித மனத்தின் எல்லையைத் தொட்டுச் செல்லும் கவிஞரின் கவிதை மனம் மேன்மைத்துவமானது.

இவ்வாறாகப் பல்வேறுபட்ட பொருண்மைகளால்

நிறையும் செல்வாவின் கவிதைகள், தேவையுணர்ந்து பாடப் பட்டவையாக, அவலங்களைப் பேசுபவையாக அவற்றிலிருந்து மீள ஆசைப்படுபவையாக, அனுபவ வெளியை முன்னிறுத்து பவையாக அமைந்து படிப்போரின் செவிகளில் செய்தி சொல்லாமல் மனதோடு பேசி ஏதோவொன்றை உணர்த்த விளைபவையாக உள்ளன. இத்தொகுதியைப் படிக்கும் ஒவ்வொருவரும் இவ்விடயங்களை உணர முடியும். ஆனாலும், கவிதைக்கான கட்டிறுக்கம் அதன் மொழி வீச்சு, உத்தி முறைகள் என்பவற்றிலும் கூறிய விடயங்களை ஒரே பாணியில் மீளக்கூறாது தவிர்ப்பதிலும் ஒரே சொற்கள் பல கவிதைகளிலும் நிலைபேறாக்கம் பெறாமலிருப்பதிலும் கவனமெடுக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

இருப்பினும், கவிஞரின் தமிழ் மீதான தாடனமும், தீராத் தேடலும், தொடரியக்கமும், புலமைவாதிகளின் நட்பும் தமிழ் போதிக்கும் அனுபவமும், தமிழ் மீது கொண்டுள்ள பற்றுணர்வும் காதலும், கவி புனையும் ஆற்றலும் கவிஞர் கே.எம்.செல்வதாஸின் ஒளிரவிருக்கும் திசையை அறிவிக் கின்றன. இன்னும் எழுதி இருள்நீக்கி ஒளிர வாழ்த்துகிறேன்.

– சு.க.சிந்துதாசன்

நன்றி

சு.க.சிந்துதாசன்
க.பரணீதரன்
ஓவியர் பாஸ்கர்
ஜீவநதி
புதியநிலா
பரணி அச்சகம்

# உணர்வின் மொழி

"கவிதை என்பது சக்தி வாய்ந்த
உணர்ச்சிகளின் தன்னியல்பான
வெளிப்பாடு..."

- வில்லியம் வொர்ட்ஸ் வொர்த்-

கவிதை என்பது உணர்வின் மொழி. உள்ளத்தில் தோன்றுகின்ற எண்ணங்கள் அந்த மொழியின் வழியே இறங்கிக் கொள்கின்றன. அத்தகு அனுபவங்களை இலக்கியப் பிரதிகளின் வாயிலாக வெளிக்கொணரும் போது அது அற்புதமான உணர்வாகின்றது. காட்சியும் அனுபவமும் இணையும் போது கவிதைகள் பிறக்கின்றன. கவிஞனது அக புற உலகை மொழி என்னும் கயிறு இணைக்கும் போது கவிதை உருக்கொள்கிறது. எதை எழுத வேண்டும் என மனம் எண்ணுகின்றதோ அதை கவிதைமொழி சாத்தியமாக்கி விடுகின்றது.

காலத்துக்குக் காலம் கவிதை வடிவங்களும் அவற்றின் மொழிதல் முறைமைகளும் மாற்றம் பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. எந்தவொரு இலக்கிய வடிவத்தினூடாகவும் சொல்லிவிட முடியாத பல உணர்வுகளை கவிதை மொழியின் வாயிலாகச் சொல்லிவிட முடியும். அதுவே கவிதைக்கான தனித்துவம்.

கவிதைப் பரப்பை பொறுத்தவரையில் இன்னும் நான் கற்றுக் கொண்டிருக்கும் மாணவனே. என்னைச் சார்ந்த புற உலகில் கண்ட காட்சிகளும் பெற்றுக் கொண்ட அனுபவங்களும் உள்ளத்தில் ஏற்படுத்திய தாக்கங்களே இக்கவிதைகள். இயற்கையை அதிகம் நேசிப்பவன் நான். அத்தகு இயற்கை எப்பொழும் என்மனதில் பல கேள்விகளை முன்னிறுத்திக் கொண்டே இருக்கின்றது. அத்தகு கேள்விகளுக்கு விடை காண எண்ணிய பயணங்களின் அனுபவங்கள் இங்கு பதிலாகியிருக்கின்றன. புள்ளிகளும் ஒரு நாள் கோடுகளாய் நீளும் என்ற நம்பிக்கை என்னிடத்தில் அதிகமாகவே உண்டு.

- கே.எம்.செல்வதாஸ்

## வேரினை அறுக்கும் கிளைகள்

மரங்களிலிருந்து
பிடிகளை வாங்கிவிட்டு
மரங்களின் உயிர்களை
வாங்குகின்றன
கோடரிகள்

நிழல்தரும்
மரங்களை அழித்துவிட்டு
சுட்டெரிக்கும்
சூரியனை
பழித்துக்கொண்டு
சென்றான்
பாதைசாரி

முன்னது அறியாமை
பின்னது அறிந்தமை

வாழ்வெனும்
நெடிய பாதையெங்கும்
வலிகளைச்
சுமந்து கொண்டு
அத்தனைக்கும்
தானே காரணம்
என்பதனை உணர்ந்து கொள்ளாது
நகர்ந்து கொண்டிருக்கின்றான்
மனிதன்

## பறவைகளின் வலிகள்

பறத்தலில்
மகிழ்வு காண்கின்றன
என்பதனை நினைத்துக் கொண்டு
பறவைகளின்
வலிகளை மறந்து விடுகின்றோம்

வான்வெளியெங்கும்
கோரப்பற்களுடன்
காத்திருக்கும்
எதிரிகளைத் தாண்டியே
தினம் தினம்
அவை பறத்தலில்
ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.

ஆனபோதும்
தம் பறத்தலை
ஒரு போதும்
அவை நிறுத்தியதில்லை

வாழ்வெனும்
நெடிய பயணத்தில்
பல தடைகள்
வந்தபோதும்
பறந்து கொண்டேயிருப்போம்
பறவைகள் போலே

## கனவுகளைச் சுமந்தோடும் மனிதன்

கனவுகள்
வசமாகும்
காலமொன்றின்
அந்தத்தில்
தன் இறுதிப்பாடலைப்
பாடிக் கொண்டிருந்தான்
ஒருவன்

நீண்ட பெருங்கனவுடன்
வாழ்ந்தவன் தான் அவன்
ஆனபோதும்
பெருவெளியொன்று
அவனையும்
அவன் கனவுகளையும்
பிரித்து வைத்து
வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

ஒவ்வொரு முறையும்
பருத்த ஆவலோடு
அவன் கனவுகளை நோக்கி
ஓட ஆரம்பிப்பான்

ஓட்டம் நிறைவு பெறும் வேளை
மறுபடியும்
தொடக்கப் புள்ளியிலேயே
வந்து நிற்பான்

ஆனபோதும்
அவன் ஓடுவதை
ஒரு போதும்
நிறுத்தியதில்லை

பெருவெளியை
தானும் கடந்துவிடுவேன்
என்ற நம்பிக்கையில்
அந்தக் கனவுகளைச்
சுமந்தபடி
மறுபடியும்
ஓடிக்கொண்டேயிருந்தான்

# இரவின் முகட்டில் மின்னும் நட்சத்திரங்கள்

இரவின் முகட்டில்
மின்னிக் கொண்டிருக்கின்றன
நட்சத்திரங்கள்

குழந்தைப் பருவம் தொட்டு
இன்றுவரை
அவை பற்றிய
தேடலின் பதில்கள்
ஆச்சரியக் குறிகளாகவே
இருந்து கொண்டிருக்கின்றன.

நூறாண்டுகள்
பல கடந்த
தம் வரலாற்றைத்
தமக்குள்ளே
கொண்டிருந்தும் - அவை
அமைதியோடு
நகர்ந்து கொண்டிருக்கின்றன

இயற்கை தரும்
பாடங்களைக்
கற்றுக் கொள்ள
மறந்ததனால்
நூறாண்டுக்குள்ளேயே
தன் வாழ்வை
இழந்து கொள்கின்றான்
மனிதன்

## மனிதம் மலரட்டுமே

புலன்களுக்கு அகப்படாத
பாதையொன்று
எல்லோர் வீட்டு
வாசல்களிலிருந்தும்
இடுகாடுவரை
வரையப்பட்டே இருக்கின்றது

மறந்துபோன
மனங்கள்
மமதை கொண்டு
அலைகின்றன

வீழ்ந்தவனைத்
தூக்கிவிட மனமற்று
வேடிக்கை பார்க்கின்றது
உலகு

வெந்து தணிந்த
காடாக
நீறு பூத்த
மனத்தோடு
நொந்து கழியும்
வாழ்வதனில்
கொஞ்சமேனும்
மனிதம்
மலரட்டுமே...!

# நாகரிக மனிதர்கள்

காற்றின்
பக்கங்கள் எங்கும்
தன் வாழ்வின்
அவலத்தை
எழுதிக் கொண்டிருந்தான்
தெருவோர யாசகன்

நேற்றுவரை
தன் பசிமறந்து
உறங்கிய
அவனது
இருப்பிடத்தை
களவாடியிருந்தனர்
நாகரிக மனிதர்கள்

நீர் வற்றி
பாளங்களாகி
மேற்கிளம்பிய
மனமெனும் நிலப்பரப்பு
மழைத்துளிகளின்
வரவுக்காக
ஏங்கிக் கொண்டிருந்தது

சொற்களுக்குள்
கட்டுண்டு போகாது
கரைபுரண்டு ஓடியது
சோகநதி

## அழகுச் சிறை /மீன்களின் முகாரிகள்

மீன்தொட்டிகளில்
உயிரோடு
சாகடிக்கப்படுகின்றன
மீன்குஞ்சுகள்

துயரக் குடுவைக்குள்ளிலிருந்து
மீன்பாடும்
முகாரிகள்
எவர் காதுகளிலும்
வீழ்வதில்லை

அழகை
ஆராதிக்கின்றோம்
என்ற போர்வையில்
அதன் கனவுகளைக்
காவு கொள்கின்றோம்

சுதந்திரம்
பறிக்கப்பட்டு
கண்ணாடிச் சுவர்களில்
மோதி மோதியே
அவை சிந்தும்
கண்ணீர் துளிகள்
நீரோடு நீராகும்
அவலத்தை
எவர்தான் அறிவாரோ...?

## மரங்களைக் காயப்படுத்தும் கோழிகள்

கொத்தித் தின்கின்ற
கோழிகளுக்குத்
தெரிவதில்லை
இலைகளின் வலிகள்

ஒவ்வொரு முறை
கொத்தும் போதும்
அவை
அங்குமிங்குமாக
அசைந்தாடுவது
வலிகளால்த்தான்
என்பதனை மறந்து
மறுபடியும்
மறுபடியும்
மரங்களைக்
காயப்படுத்திக் கொண்டேயிருந்தன
கோழிகள்

கோழிகளுக்கு
மகிழ்வைக்
கொடுத்துவிட்டு
மரங்களை
வேதனைப் படுத்துகின்றது
இயற்கை

காலப்பெருவெளியெங்கும்
வலிமைக்கும்
மெலிமைக்குமான
போராட்டங்கள்
தொடர்ந்து

கொண்டேயிருக்கின்றன
கோழிகளுக்கும்
இலைகளுக்குமான
போராட்டம் போல

## மீள அமரமுடியா உலகம்

அவர்களை
அவர்களது
உலகத்தில்
வாழவிடுங்கள்

உங்கள்
நிறைவேறாத
ஆசைகளை
அவர்கள் மீது
திணிக்காதீர்கள்

அந்த
உலகத்தை
அவர்கள்
கடந்து விட்டால்
மறுபடியும்
அவர்களால்
அங்கே
சஞ்சாரம் செய்யமுடியாது

இந்த
உலகிலிருக்கும்
பலரும்
மறுபடியும்
செல்லத்துடிக்கும்
உலகம் அதுமட்டும்தான்

ஆதலால்
அவர்களை
அவர்களது
உலகத்தில்
விட்டுவிடுங்கள்

# பூவினிடத்தை நிரப்பும் வண்ணத்துப்பூச்சிகள்

பூவினிடத்தை
நிரப்பிச் செல்கின்றன
வண்ணத்துப் பூச்சிகள்

இடம் ஒன்றுதான்
பொருட்கள் வேறுபடுகின்றன

பிரதியீடு என்ற ஒன்றால்
உலகம் அதன் போக்கில்
இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது

நேற்றொருவர்
இருந்த இடத்தில்
இன்றொருவர் அமர்ந்து கொள்வார்

அதிகாரங்கள் கைமாறும்
ஆனபோதும்
அதே இடம்
அதே பணி
தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்
காலம் முழுவதும்

இருக்குமிடம்
எவர்க்கும்
நிரந்தரமில்லை
என்பதனை உணர்ந்து கொண்டால்

வாழ்வெனும்
நந்தவனத்தில்
சுதந்திரமாக
சிறகடிக்கும்
பட்டாம்பூச்சிகள்....

## யாவும் கடந்து போதல்

தொண்டைக்குழிக்குள்
விக்கித்து நிற்கின்றன
துயரமொழிகள்

காரணந் தேடி
களைத்து
ஒதுங்கி நிற்கின்றன
வார்த்தைகள்

குறுக்கப்பட்ட
வாழ்வெளியில்
கடந்து போதல்களால்
நின்மதி காண்கின்றன
மனங்கள்

அவிழ்க்கப்படா
முடிச்சுகள் கொண்ட
பிரபஞ்ச வெளிதனில்
நம்பிக்கையெனும்
பற்றுதலால்
நகர்கின்றது வாழ்வு

அத்தனையும்
அறிந்தும்
எதுவும் சொல்லாது
நகர்ந்து செல்கின்றது
காலம்

## தொலைத்துவிட்டோம்

நான் அன்றுபார்த்த
அதே நிலா
அப்படியே இருக்கின்றது

இரவினில் வந்தமரும்
முக்காடிட்ட இருட்பேயை
கொன்றொழிக்கும் வீரியத்தில்
எந்த மாற்றமும்
இருப்பதாகத் தெரியவில்லை

முன்னரிலும் பொலிவும்
அழகும் கூடியதாகவே
தெரிகிறது

ஆனால்
பலவேளைகளில்
தாய்மடி தாலாட்ட
நிலவொளியில்
நின்மதியொடு
உறங்கிய வாழ்வையும்

நிலவொளியில்
பலகதைகள் பேசி
பகிர்ந்துண்ட பொழுதுகளையும்
காணமுடியவில்லை

இத்தனைக்கும்
பொழுதொன்று
புலருமென்ற
நம்பிக்கையொடு
காத்துக்கிடக்கிறது
நிலா

## காலம் வலிது

நேற்றைக்கும்
இன்றைக்குமான
இடைவெளியில்
களவாடப்பட்டிருந்தது
பூமிப்பந்து

வந்தவர் யார்
கொண்டு சென்றவர் யார்
எந்த அடையாளங்களும்
விட்டுச் செல்லப்படவில்லை

இயற்கை
சற்று விசித்திரமானது
உலகை அதன் போக்கில்
விட்டுவிட்டு

காத்திருந்து
காலக்கணக்கை
முடித்து வைக்கின்றது

இந்த உலகில்
எதுவும் நிரந்தரமில்லை
என்பதனை
மறுபடியும் மறுபடியும்
நிரூபித்துக்கொண்டே
செல்கின்றது
காலம்

## சருகு

சற்று விலகிச் செல்லுங்கள்
காற்றைச் சுத்தம் செய்து
எம் உயிர்காத்த
ஒற்றைச் சருகு இங்கே
வீழ்ந்து கிடக்கின்றது

உழைத்த உழைப்பில்
ஓய்வு கண்டு
விடுதலைப் பெருமூச்சை
உள்வாங்கி
ஓரமாக  உறங்கிக் கொண்டிருக்கின்றது

சலனம் செய்து
அதன் நின்மதியைக்
கெடுத்து விடாதீர்கள்

நேற்றுவரை எமக்காக
உழைத்துக் களைத்த அது
எம்மிடத்தில்
எந்தப் பிரதியுபகாரத்தையும்
இதுவரை கேட்டதில்லை

தன் பிறப்பின் தேவையறிந்து
தன் பணிமுடித்து
விழிமூடித்துயில்கின்ற
அதன் ஆத்மாவைத்
தொந்தரவு செய்யாது
சற்றே விலகிச் செல்லுங்கள்...

## மறுதலிப்பு

நான்
எந்தக் குற்றமும்
செய்ததில்லை
ஆனாலும்
தண்டிக்கப்படுகின்றேன்

நியாயங்கள்
வலுவிழக்கின்றன
நிஜங்கள்
மறுதலிக்கப்படுகின்றன.
நிழல்கள்
வாழ்வு பெறுகின்றன.

நம்பிக்கையென்னும்
ஒற்றைப் புள்ளி மீதான
பற்றுதலோடு
மீதமுள்ள
வாழ்வு
நீட்சி பெறுகிறது

## புள்ளிகளும் ஒருநாள் கோடுகளாய் நீளும்

மண்ணும் தீயும்
உண்ணும்
உடலங்கள்

தீர்மானங்களில்
மாற்றமில்லை
தப்பித்துக்கொள்ள
வழியுமில்லை

காலப்பிடிக்குள்
நகரும் வாழ்வெளியில்
ஆயிரம் அவஸ்தைகள்
வர்க்கம் - செல்வம்
அதிகாரம் என்னும்
அற்ப சிந்தனையில்
அலைக்கப்படும்
மனிதங்கள்

இருக்கும் புள்ளி
எவருக்கும்
நிரந்தரமில்லை
எவர் வாழ்விலும்
முற்றுப்புள்ளி இட
எவருக்கும்
உரிமையில்லை

புள்ளிகளும் ஒருநாள்
கோடுகளாய் நீளும்
அப்போது
அதிகாரங்களும்
வர்க்கங்களும் செல்வங்களும்
தலைகவிழ்ந்தே தீரும்...

## சாம்பல் மேடுகள்

மரங்களைப் பாடுவோம்
மரம்
மண்ணுலகின்
ஜீவநாடி

மானிடன்
உயிர்வாழ வழிசமைத்து
அவன் கைகளாலேயே
மடிந்திடும்
அற்ப உயிரி

ஏ மானிடனே
மரங்களின்
ஓலங்கள் உன்
காதுகளில்
விழவில்லையா…?

நெஞ்சக் கூட்டறைக்குள்
புகுந்து
மனதை எழுப்பவில்லையா…?

வெட்ட வெட்டத்
தழைத்திடும்
அதன் வேரையல்லவா
வெட்டி விடுகிறாய்

மரங்களை அழிப்பதாக
எண்ணி மண்ணை
உன் தலையிலல்லவா
கொட்டுகின்றாய்

மரங்களின்
அருமை புரிகின்ற போது
பூமிப் பந்து
சாம்பல் மேடுகளால்
நிறைந்திருக்கும்

## நானாக இருக்க ஆசைப்படுகிறேன்

நான்
நானாகவே
இருக்க ஆசைப்படுகிறேன்

நிலை தளராவேளை
எந்தக் கேள்விகளும்
என்னைத் தொந்தரவு
செய்ததில்லை
எந்த விரல்களும்
என்னைச் சுட்டியதில்லை

ஆனால்
இப்போது
கேள்விகள் வலுக்கின்றன
பார்வைகள்
உன்னிப்பாகின்றன
குற்றங்காண
மனங்கள்
துடிக்கின்றன

ஆதலால்
நான் நானாகவே
இருக்க ஆசைப்படுகிறேன்

நான் என்பது
அகங்காரமல்ல
என் சுயத்தின்
அடையாளம்

# அனுபவம்

இவரை விரும்புவோர்க்கு
இவர் தான்
கண்கண்ட தெய்வம்
வார்த்தைகள்
நன்மை தரும்
பெருவரங்கள்
செய்கைகள்
ஊக்கம் தரும்
மாதிரிகள்

இவரை வெறுப்போர்க்கு
இவர்தான்
கண்கண்ட துன்பம்
வார்த்தைகள்
செவிப்பறைக்குள்
புகுந்திடும்
அம்புகள்
செய்கைகள்
வெறுப்பூட்டும்
வேதாந்தங்கள்

நீதி:
மூத்தோர்
அனுபவத்தின் அடையாளங்கள்
விரும்புவோர் வாழ்வுபெறுவர்
வெறுப்போர் தாழ்வு பெறுவர்

## என்னை விட்டுவிடுங்கள்

தயவு செய்து
என்னை
விட்டுவிடுங்கள்

என் பாதையில்
பயணிக்கவே
நான் ஆசைப்படுகிறேன்

என் தடங்களும்
இப்பூமியில்
பதியட்டுமே

உங்கள்
நிழல்களில் வாழ்ந்து
என் நிஜத்தை
நான் தொலைத்துவிட்டேன்

பலபொழுதுகள்
என்னில் நானே
என்னைத்
தேடியலைகின்றேன்

முட்டிமோதி
முந்திச் சென்றுதான்
வேர்கள் மண்ணில்
நிலை பெறுகின்றன

ஆதலால்
தயவு செய்து
என்னை
விட்டுவிடுங்கள்

## என் கேள்விகள்

நான்
யாரிடமும்
எந்தக் கேள்விகளும்
கேட்பதில்லை

என்னை நோக்கியே
என் கேள்விகள்
என்றும்
இருந்து கொண்டிருக்கும்

கேள்விகளுக்கான
விடைகளைத் தேடுகையில்
என்னையே நான்
புடம் போட்டுக் கொள்கின்றேன்

இன்னொருவரில்
தங்கி நிற்காது
என் பாதையில்
நானே பயணம்
செய்வதனால்

நான்
இன்னும் நானாகவேயிருக்கின்றேன்
இன்னொருவரில்
தங்கியிருந்தால்
என்னை நான் என்றோ
இழந்திருப்பேன்

## ஆறாவடுக்கள்

போதும்
நிறுத்தி விடுங்கள்
என் பொறுமைக்கும்
ஓர் எல்லையுண்டு

எத்தனை காலம் தான்
உங்கள்
கொடுமைகளை
நான்ன தாங்கிக் கொள்ள

புன்னகை செய்த
என் முகத்தை
சிதைத்துவிட்டீர்

உடலமெங்கும்
ஆறாத வடுக்களைத் தந்து
குற்றுயிர் ஆக்கிவிட்டீர்

உங்களைக் காப்பதற்காக
இதுவரை எந்தக் கைமாறும்
நான் பெற்றதில்லை

இன்று என்னைக்
காத்துக் கொள்ள மறந்தால்
நாளை உங்களை
காப்பாற்ற எவராலும் முடியாது
இப்படிக்கு
இயற்கை...

## காலத்தின் சாட்சி

கற்களைப்
போற்றுங்கள்

கற்கள்
வரலாற்றின்
பக்கங்களுக்கு
முகவரிகள்

வாழ்ந்துவிட்டுச் சென்ற
மனிதர்களுக்குச்
சாட்சிகள்

காலத்தில்
நடந்தவற்றைப்
பேசுகின்ற
சொற்கள்

மௌனம் கலைந்து
பேசும் வலிமை
பெற்று விட்டால்
ஆயிரம் கதைகள்
அவை சொல்லும்

ஆதலால்
கற்களைப் போற்றுங்கள்

## காலக்கடமை

காற்றினால்
அவற்றின் பூக்கள்
உதிர்ந்து கொண்டேயிருந்தன

அதனிடத்தில்
எந்தப் பின்வாங்குதல்களும்
இருப்பதாகத் தெரியவில்லை

மரங்கொண்ட
பூக்களை விட
மண்கொண்ட பூக்களே
அதிகமாயிருந்தன

ஆனாலும்
புதிய பூக்களை
மரங்கள்
மலரச் செய்து கொண்டேயிருந்தன

நிலங்கொண்ட
பூக்களை
வேர்கள் கொண்டு
மறுபடியும்
மரங்கள்
தமக்குள்ளேயே
உள்வாங்கிக் கொண்டன

மரங்கள்
கற்றுத்தந்த பாடங்களை
மறந்ததனால்
மனிதன் மரமானான்
மரங்கள் மனிதர்களாயின

## உணர்தல்

உண்ணும் போது
தொண்டைக் குழியை
மீன் முள்ளுக்
குத்துகையில்
உணர்ந்து கொண்டேன்
தூண்டிலின் வலியை

மதிக்கப்படும் போது
மனவெளியை
மகிழ்நிலைகள்
நிறைக்கும் போது
உணர்ந்து கொண்டேன்
பெற்றவரின் பெருமையை

நடக்கும் போது
வெறுங்கால்களை
வெம்மை
சுட்டெரிக்கையில்
உணர்ந்து கொண்டேன்
வீதி வேலைக்காரரின் துயரை

எரிக்கப்படும் போது
உடலங்கள்
சாம்பலாகி
எஞ்சுகையில்
உணர்ந்து கொண்டேன்
வாழ்வின் அருமையை

## காலம் தப்பிய மழை

பசுமை கனக்கும்
இளவேனில் காலமதில்
தன் இருப்பை நிலைநிறுத்த
பூக்களை மலரச் செய்து
காத்துக் கொண்டிருந்தது
முற்றத்து வேம்பு

நாசி வழியே உட்புகுந்த
அதன் வாசம்
மாறு முன்னே
முற்றமெங்கும்
குற்றுயிர்களாய்க்
குவிந்து கிடந்தன
அதன் பூக்கள்

நேற்று வரை
புன்னைகயோடிருந்த
வேம்பின் முகத்தில்
இழப்பின் வலி
இளையோடிருந்தது

நேற்றைக்கும்
இன்றைக்குமான
இடைவெளியில்
வேம்பின் கனவுகளை
காவு கொண்டிருந்தது
காலம் தப்பிய மழை

## விண்ணோக்கும் விருட்சங்கள்

விண்ணின் துளிகள்
மண்ணிடைப்புகுந்து
தீண்டுதல் செய்ய
விதைகள்
விருட்சங்களாகின்றன

விண்ணோக்கும்
விருட்சங்கள்
மண்ணோக்கி
மழையை
அழைத்து நிற்கின்றன

மனிதர்களுக்குப்
பாடஞ்சொல்ல
இயற்கை எப்பொழுதும்
தயாராகவே
இருக்கின்றது

கற்றுக்கொள்ள
மனித மனங்கள் தான்
மறுக்கின்றன

ஆற்றலின்
அகந்தையை அடக்க
தானே வலியது என்பதை
மறுபடியும்
மறுபடியும்

நிரூபித்துக் கொண்டுதான்
இருக்கின்றது
இயற்கை

## மனிதம்

நாங்கள்
ஒவ்வொரு நாளும்
கடந்து சென்று கொண்டுதான்
இருக்கின்றோம்
எந்தச் சலனமுமின்றி

அவர்களின்
முகங்கள்
எங்களை நோக்கி
ஏங்கிய வண்ணமே
இருக்கின்றன

அவர்தம்
உணர்வுகளை
புரிந்து கொள்ள முடியாது
ஈரக்கசிவு சிறிதுமின்றி
பாறைகளாய்
இறுகி விட்டன
மனங்கள்

எங்களைப் போல
வாழப் பிறந்தவர்கள் தான்
அவர்களும்
ஆனாலும்
காலம் அவர்களை
மாத்திரம்
வஞ்சித்துவிட்டது

## புதிய கிரகம் நோக்கிய பயணம்

இருள் கவிந்த
நடுநிசிப் பொழுதொன்றில்
எழுந்திருந்து
எதிர்காலக் கணக்கை
எழுதிக் கொண்டிருந்தான்
காலக் கணக்கன்

சிறியதும் - பெரியதுமாய்
நீண்டு சென்றது
அதன் பட்டியல்

வாழ்தலுக்கான
நீர் - காற்று மண்
பசுமை கனக்கும்
மரங்கள்

எவற்றையும்
பட்டியலில்
காணமுடியவில்லை

கதிகலங்கிப்போன
காலக்கணக்கன்
மறுபடியும்
மறுபடியும்
தன் கணக்கை
மீள் பரிசீலனைக்கு
உட்படுத்தினான்

முடிந்த முடிவாக
அவன் நெஞ்சைத்

துருத்தியது எதிர்காலக்
கணக்கு

எழுதிய கணக்கை
முடிவுறத்திவிட்டு
பூமியிலிருந்து
புதிய கிரகம் நோக்கி
நகரத் தொடங்கினான்
புதிய கணக்கொன்றை
ஆரம்பிக்கும் ஆசையோடு

## தன்னையுணர்தல்

இரவுகள்
தின்னும்
பொழுதொன்றின்
அந்திமத்தில்
என்சுயம் குறித்த
கேள்விகளோடு

கனவில் தோன்றினான்
ஒரு மனிதன்

யார் நீ என்றேன்
நான்
மனிதன் என்றான்

நான் யாரென்றேன்
நீயும் மனிதன்தான்
என்றான்

தூக்கம் கலைந்து
எழுந்து பார்க்கின்றேன்
நான் மட்டும்
இருக்கின்றேன்
அவனைக் காணவில்லை

## மாயக்கோடுகளை விழுங்கும் ஒளி

விம்பங்கள்
உடையும்
நாளொன்றில்

ஒளியின் பிரதிநிதியாக
எழுந்து நின்றது
அறிவு

கருநிறங்கொண்ட
இருளை விலக்கி
எங்கும் நிறைந்து
நின்றது
அறிவின் பிரவாகம்

இருளில்
அச்சுறுத்தும்
மாயக்கோடுகளை
விழுங்கி நின்றது
ஒளி

வாழ்வின்
இருமுனைத்
தத்துவங்களாய்
இணைந்து நின்றன
இருளும் ஒளியும்

## வறண்டு போன வார்த்தைகள்

இருப்புக் குறித்த
கேள்விகள் மேலெழ
துயரத்தோடு
தன் வாழ்வை
கடந்து கொண்டிருந்தான்
அவன்...

வறண்டு போன
வார்த்தைகளில்
நீருறும் என்ற
நம்பிக்கையில்
நகர்ந்து கொண்டிருக்கையில்

முன்னரிலும்
வறண்டுபோன
வார்த்தைகள்
வந்து விழுந்தன.

கனத்த
இதயத்தோடு
நடந்து சென்ற
அவனது பார்வையில்
பாய்ந்து கொண்டிருந்தது
நாளையைப் பற்றிய
ஏக்கங்கள்...

## உயிர்கள் கலந்த கடல்

தெருக்கள் களவாடப்பட்டு
பெருந்துயர்
கவிந்த நாளொன்றில்
அதன் குறியீடாக
முன்னே
பரந்து நின்றது
பெருங்கடல்

கால்கள் புதையுண்டுபோகும்
மணற்பரப்பில்
புதைந்து போயின
பெருங்கனவுகள்

உயிர்கள் கலந்த
பெருங்கடற்பரப்பை
வெறித்துப் பாரத்துக் கொண்டிருந்த
அவன் முகத்தில்
இழையோடிக் கிடந்தது
இழப்பின் வலி...

## ஆத்ம வலிமை

ஆத்மாவைச்
சுற்றி நிகழும்
சம்பவங்கள்
படிப்பினைகள் ஆகின்றன

அவற்றிலிருந்து
ஏதோவொன்றினை
கற்றுக் கொள்கிறது
ஆத்மா...

பழைய சம்பவங்களும்
படிப்பினைகளும் மறைய
புதிய சம்பவங்களும்
படிப்பினைகளும் ஆத்மாவை
சூழ்ந்து கொள்கின்றன.

தன் எண்ணங்களால்
சூழ்நிலைகளைக்
கட்டுப்படுத்தலாம்
என்பதனை
உணரும் போது
வலிமை காண்கிறது
ஆத்மா...

# பட்டாம்பூச்சியாய் வெளிவரும் கூட்டுப்புழு

தோல்விகளின்றி
எந்த வரலாறுகளும்
எழுதப்பட்டதில்லை

பலவெற்றிகளின்
தொடக்கப் புள்ளிகளே
தோல்விகள் தான்.

தோல்விகள் தருகின்ற
பாடங்கள்
நிலைத்து நின்று
வெற்றிகள் வரை
ஆற்றுப்படுத்துகின்றன

வெற்றிகளைப்
பெற நினைக்கும்
மனங்கள் - முதலில்
தோல்விகளை
ஏற்றக் கொள்ள
கற்றுக்கொள்ள வேண்டும்.

மோனத்தவம் கிடக்கும்
கூட்டுப்புழு
காத்துக் கிடந்தே
பட்டாம் பூச்சியாக
வெளிவருகின்றது.

வெற்றி யென்பது
வியாபாரப்பொருளல்ல

வெற்றி
உழைப்பின் அறுவடை
பொறுமையின் பரிசு
வியர்வையின் மூலதனம்



இயற்கையைக் கூர்ந்து நோக்கல் என்பதும் கவிதை வழி வெளிப்படும் உணர்வுகளில் தொற்றியுள்ள குறித்த அவதானிப்புக்களும் அலாதியானவை. இவை யாவற்றையும் கவியாக்க முனைந்துள்ளமை கவிஞரின் கவிப்பற்றையும் மனித நேயத்தையும் கட்டியங்கூறி நிற்கின்றன. ஆனாலும் நல்ல கவிதை என்ற இடம் பாராட்டின் மூலமோ வாழ்த்து மூலமோ கிட்டிவிடுவதில்லை. அது இலக்கியத்தரத்தைப் பொறுத்து அமைவது. அவ்விடத்தை அடைதல் என்பது மொழியைக் கையாள்வதில் தங்கியுள்ளது. கவியாக்கச் செயற்பாட்டில் மிகுந்த தாடனமுடையவராய் மிளிர்வதற்கு மொழியை வசப்படுத்த வேண்டும். வாலாயமான விடயப்பரப்புக்களைத் தேர்ந்தெடுத்து புனைய வேண்டும். எவற்றைப் பாட வேண்டும் என்ற மன நோக்கைக் கொண்டிருக்க வேண்டும். அதன்வழி இயக்கமுறும் ஒரு கவிஞராலேயே இலகுவில் வாசகரின் நுகர்வுத் தளத்தை தக்க முறையில் பேண முடியும். இவ்வடிப்படைத் தன்மைகளைப் புரிந்து கொள்ளல் என்பது ஒவ்வொரு கவிஞர்களுக்கும் அவசியமாகிறது. இத்தன்மைகளைப் புரிந்து கொண்டு இயக்கமுறும் கவிஞராகவே இளவல் செல்வாவை நான் பார்க்கிறேன்.

– சு.க.சிந்துதாசன்

ISBN 955524963-6